1990 மார்ச் 22]

ஆடுகளுக்கு அம்மை நோய் தடுப்பு ஊசி.

*4397 திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆடுகளுக்கு அம்மை நோய் தடுப்பு ஊசி போட்டதால் சுமார் 1,500 ஆடுகள் இறந்து போனது அரசு அறியுமா ?

(ஆ) பாதிக்கப்பட்டவர்கள் அரசிடம் நிவாரணம் கோரி இருக்கிறார்களா ?

(இ) இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 3,282 ஆடுகளுக்கு ஆட்டு அம்மைநோய்த் தடுப்பூசி போட்ட தருணத்தில் 878 ஆடுகள் இறந்தன.

(ஆ) ஆம்.

(இ) இறந்த ஆடுகளில் ஈட்டுறுதி செய்த 106 ஆடுகளின் சொந்தக்காரர்களுக்கு ஈட்டுறுதித் தொகை வழங்கப்பட்டது. ஈட்டுறுதி செய்யப்படாத 772 ஆடுகளின் சொந்தக்காரர்களுக்கு முன்னுரிமை அளித்து இத்துறையின் மூலம் செயல்படும் சிறப்பு மத்திய நிதிஉதவித் திட்டம் மூலமாகவும் மற்ற திட்டங்களின் மூலமாகவும் வங்கிக் கடன் அடிப்படையில் மானியத்தோடு ஆடுகள் வழங்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது. ஆடுகளுக்கு தடுப்பூசி போடபப்பட்டு நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. கே. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, அம்மை நோய்த் தடுப்பு என்கிற வகையில் ஊசி போடப்பட்ட காரணத் தால் நூற்றுக்கணக்கான ஆடுகள் இறந்துவிட்டன என்று சொன் னால் அந்த மருந்திலே ஏற்பட்ட குறைபாடுதான் அதற்குக் காரணமா ? எதனால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்பதைத் தெளிவாக்கவேண்டும். அந்த ஆடுகளைப் பொறுத்த வரையில் உத்தரவாதம் செய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்றால் எப்படிச் சரியாக இருக்கும் ? ஆடு, மாடுகளை மேய்த்து

வாழ்கின்ற சாதாரண ஏழைகளாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுடைய ஆடுகள் இப்படி இறந்தால் அவற்றை ஈடு செய்ய ஏதேனும் மானியத்தொகை அல்லது நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கவேண்டும் என்பது நியாயம் அல்லவா? எனவே, அப்படிக் கொடுக்க முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆடுகள் இறந்ததன் உண்மையான காரணத்தை அறியாமல் தடுப்பூசி போடப்பட்டதன் காரணத்தாலேயே அவை இறந்துவிட்டன என்று மக்கள் சொல்கிறார்கள். அவ்வாறு அல்ல. புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆட்டம்மைத் தடுப்பூசிப் போடப்பட்டது. 1988-ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில். அந்த ஆடுகள் வெக்கை நோயினால் இறந்திருக்கக்கூடுமோ என்றெண்ணி, வெக்கை நோய்க்கிருமிகள் அந்தத் தடுப்பூசியில் இறந்திருக்கக்கூடுமோ என்றெண்ணி சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, இராணிப்பேட்டை நோய்த்தடுப்பு நிலையம் போன்ற இடங்களில் ஆய்வு செய்யப்பட்டு வெக்கை நோயினால் அவை இறக்கவில்லை என்றும் வேறொரு புதிய நோய் ஏற்பட்டதன் காரணத்தாலேயே அந்த இறப்பு ஏற்பட்டது என்றும் அறிந்திருக்கிறார்கள். அந்த வகையிலே இறந்து விட்ட ஆடுகளைப் பொறுத்தவரையில் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் மூலம் காப்புறுதி செய்து உரிய தொகையினைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏராளமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்றவர்களும் இதனை விரிவாகச் செயல்படுத்துகிற வகையில் அதாவது ஆடுகளுக்கும், மாடுகளுக்கும் காப்புறுதித் திட்டம் இருக்கின்றது என்றும், அதன்படி இறக்கின்ற ஆடுகளுக்கு உரிய தொகையினைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் மக்கள் கவனத்திற்குக் கொண்டுவரலாம். ஆனால் மானியமாக அரசாங்கம் அளிப்பதற்கு முன்வந்தால், இந்திய நாட்டில் ஆடுமாடுகளின் எண்ணிக்கை ஏராளமாக இருக்கிறது, ஒவ்வொரு நாளும் ஏராளமான ஆடுகள் இறந்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அனைவருக்கும் இந்தத் திட்டத்தின் மூலமாக நாம் நிதியுதவி அளிக்க இயலாது. அவர்கள் காப்புறுதித் திட்டத்தின் மூலமாக அந்தப் பயனைப் பெறலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]